**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 20/2023**

**வா.சா.2 – ஜோசப்**

**<u>09–07–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3, 5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் B.A., B.L. படித்துள்ளேன். எனது நிரந்தர முகவரி என்ன என்றால் 20A, பெரியான் தெரு, தேருவாய், குமுடிப்பூண்டி தாலூக், திருவள்ளுவர் மாவட்டம். நான் மேற்கண்ட விலாசத்தில் கடந்த 7 வருடங்களாக குடியிருந்துவருகிறேன். மேற்படி வீடு எனது சொந்த வீடு. இவ்வழக்கை நானும் பாபுவும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம். நான் வீடு காட்டுவதற்கு அனுமதி கோரியும் வீடுடன் சேர்ந்து ஜபம் செய்வதற்கு ஒரு அறை கட்டுவதற்கு அனுமதிகோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

2. எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது. அதனை படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன். எனது குடும்பம் குமுடிப்பூண்டியில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் குடும்பத்துடன் 2006 முதல் 2016 வரை நான் தாவா சொத்தில் குடியிருந்து வந்தேனா என்றால் குடும்பத்துடன் குடியிருக்கவில்லை எனது சகோதரி வீட்டில் இருந்தேன். நான் வாடகைக்கு குடியிருந்ததாக சொல்வதற்கு வாடகை பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் நான் எனது சகோதரியுடன் இருந்தேன்.

3. பாபு எனது தங்கையின் கணவர். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் 2016ல் கிரையம் பெற்ற இடம் குடியிருப்பதற்கான மனையிடம் என்றால் சரிதான். அதனை நான் காலியிடமாக கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் மூலப்பத்திரத்தில் காலியிடம் என்று தான்

உள்ளது என்றால் சரிதான். ஆனால் நாங்கள் கிரையம் வாங்கிய பிறகு அதில் செட் அமைத்தோம். மனையிடம் என்றால் அனைத்து சமூகத்தினறும் இருக்கும் ஒரு பகுதி என்றால் தெரியாது.

4. தாவா மனையிடத்தில் சர்ச் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியரிடம் முன்பே அனுமதி வாங்கவேண்டும் என்றால் நான் வீடு கட்டுவதற்காக மனையை வாங்கினேன். வீடு கட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளேனா என்றால் விண்ணப்பித்துள்ளேன். பாபு தாவா சொத்து அருகே உள்ள நபர்களை மதம்மாற்றம் செய்யமுயற்சிப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் வருவாய் கோட்டாச்சியர் விசாரணை செய்து தாவா சொத்தில் எந்தவிதமான ஜபகூடமோ மதமாற்றமோ செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 RTO அழைப்பாணை என்றால் ஞாபகம் இல்லை. நானும் பாபுவும் குடியிருப்புப் பகுதியில் மதமாற்றம் செய்ய முயற்சித்ததாலும், மதக்கூடம் அமைக்க முயற்சித்ததாலும் அந்த பகுதி மக்கள் அதனை எதிர்த்ததால் உண்மையை மறைத்து சர்ச் கட்ட வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து காலியிடமாக உள்ளதால் இன்று வரை குடிநீர் வரி, வீட்டு வரி, மின் இணைப்பு கொடுக்கவில்லை என்றால் செட் அமைத்து தாவா சொத்தில் நாங்கள் இருந்ததால் மேற்படி வரிகள் அனைத்தும் செலுத்தியுள்ளோம்.

6. எங்களது கிரையப்பத்திரத்தில் வீடு எதுவும் இல்லை என்றும் இன்று வரை நாங்கள் எந்த அனுமதியும் பெறவில்லை என்றால் எந்த அனுமதி வாங்கவேண்டும் என்று தெரியவில்லை, ஏற்கவே அனுமதி வாங்கிவிட்டோம். நான் வாங்கிய அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் அனுமதி எதுவும் வாங்கவில்லை என்றும், சாட்டத்திற்கு புறம்பாக நான் வீட்டு வரி ரசீது, குடிநீர் கட்டணம் மற்றும் மின் கட்டண ரசீது ஆகியவற்றை பெற்று தாவா சொத்திற்கு சம்பந்தம் இல்லாததை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. கிருஸ்துவ ஜபவீடு நான் நடத்திவந்ததாகவும் அங்கு ஏராளமான மக்கள் வந்து ஜபம் செய்வதாகவும் எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் என்னுடைய உறவினர் மற்றும் நண்பர்கள் ஜபத்திற்கு வருவார்கள் மற்றயாரையும் நாங்கள் வற்புறுத்தவில்லை. மதம் மாற்றம் செய்யவேண்டும் என்பதற்காக தான் குடியிருப்புப்பகுதியில் வீடு கட்டவேண்டும் என்று பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மதம் மாற்றவேண்டும் என்பது எங்கள் நோக்கம் அல்ல நாங்கள் வீடு வாங்கியுள்ளோம், அங்கு நாங்கள் ஜபம் செய்து வருகிறோம்.

8. அனைத்து சமூகத்தினரும் இருக்கும் மனைப்பகுதியில் மதக்கூடமோ அல்லது ஜபக்கூடமோ அமைத்தால் மதக்கலவரம் ஏற்படும் என்றால் மதக்கலவரம் எங்கள் நோக்கம் அல்ல. எங்கள் வீட்டை சேர்ந்தவர்கள் ஜபம் செய்கிறோம். அந்த பகுதியில் வசிக்கும் நபர்கள் பாபு மீது மதம் மாற்றம் செய்வதாக புகார் கொடுக்கப்பட்டு, காவல்நிலையத்தில் பாபு மதம் மாற்றம் செய்யமாட்டோம் என்று எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான், காவல் துறை தாவா சொத்திற்கு வந்து மதம் மாற்றம் எதுவும் செய்யவில்லை என்று சொல்லியுள்ளார்கள்.

9. வீடு கட்டாமல் மதக் கூடம் கட்ட நினைப்பதால் தான் அதற்கான அனுமதி உரிய துறையின் அனுமதி கொடுக்கவில்லை என்றால் யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல

என்றும், வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் குடியிருந்தது இல்லை என்றும் வழக்கிற்காக தாவா சொத்தில் குடியிருந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.